# சென்னை தலைமைச் செயலகத்தில் பொங்கல் விழா!

# தலைமைச் செயலக அலுவலர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பொங்கல் வாழ்த்து!





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.1.2026) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பொங்கல் வைத்து, தலைமைச் செயலக அலுவலர்களுக்கு பொங்கல் வழங்கினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.1.2026) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு தலைமைச் செயலக அலுவலர்களுக்கு பொங்கல் வாழ்த்துத் தெரிவித்தார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### திருவண்ணாமலையில் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில்

## அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்ப்புத்தாண்டு - தமிழர்திருநாள் விழா!

### நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் விழா பேருரையாற்றுகிறார்!

திருவண்ணாமலை, ஜன 15 –

திருவண்ணாமலையில் அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்ப்புத்தாண்டு – தமிழர்திருநாள் விழா நடைபெறுகிறது. பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் தலைமையில், தமிழ்நாடு அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி விழாபேருரையாற்றுகிறார்.

ஓவ்வொரு ஆண்டும் அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்ப் புத்தாண்டு – தமிழர்திருநாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவில் தமிழ் தொண்டாற்றியவர்களுக்கு மறைமலை அடிகளார் விருதும், பொது தொண்டாற்றியவர்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி விருதும், கலைத் தொண்டாற்றியவர்களுக்கு கலைவாணர் என்.எஸ்.கே. விருதும், ஆன்மீக தொண்டாற்றியவர்களுக்கு கிருபானந்தவாரியார் விருதும், சமூகநீதி தொண்டாற்றிவருபவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் விருதும் வழங்கப்படுகிறது. மேலும் திருவண்ணா மலை மாநகராட்சி 39 வார்டுகளிலும் வெற்றி பெற்ற மகளிருக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது.

18.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று திருவண்ணாமலை, திருக்கோவிலூர் சாலை, நகராட்சி மேல்நிலைப்பள்ளி எதிரில் அமைக்கப்பட்டுள்ள அருணகிரிநாதர் அரங்கத்தில் அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்புத்தாண்டு – தமிழர்திருநாள் விழா நடைபெறுகிறது.

விழாவிற்கு திருக்குறள் பேரவைத் தலைவர் ப.கண்ணன், அருணகிரிநாதர் விழா குழு தலைவர் வி.தனுசு, மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் ப.இந்திரராஜன், அருணகிரிநாதர் மணி மண்டப அறக்கட்டளைத் தலைவர் மா.சின்ராஜ், கம்பன் தமிழ்ச் சங்க தலைவர் புலவர் ஆ.ஆறுமுகம், அறுபத்து மூவர் ஆய்வு மையத் தலைவர் இரா. வெங்கடேசன், திருக்குறள் சமுதாயம் தலைவர் தமிழ்செல்வி கமலக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

காலை 9.00 மணிக்கு திருக்குவளை சகோதரிகள் முனைவர் மு.சுந்தரி, மு.சாவித்ரி ஆகியோரின் நாதஸ்வர இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. நிகழ்ச்சியை செய்யார் சட்டமன்ற உறுப்பினர் ஓ.ஜோதி தொடங்கி வைக்கிறார்.

காலை 9.30 மணிக்கு அருணை மருத்துவக் கல்லூரி குழுவினரின் பரத நாட்டியம் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. நிகழ்ச்சியை வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் தொடங்கிவைக்கிறார்.

காலை 10.00 மணிக்கு மங்கலம் பொங்கட்டும் என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறுகிறது. கவியரங்கத்துக்கு கவிஞர் நெல்லை ஜெயந்தா தலைமை வகிக்கிறார். கலப்பை என்ற தலைப்பில் கவிஞர் நந்தலாலாவும், மஞ்சள் என்கிற தலைப்பில் கவிஞர் பால சண்முகதேவி அவர்களும், அரிசி என்ற தலைப்பில் கவிஞர் இந்திரா விஜயலட்சுமி அவர்களும், கரும்பு என்ற தலைப்பில் கவிஞர் தஞ்சை இனியன் அவர்களும் கவிதை பாடுகிறார்கள். கவியரங்கத்தை சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

காலை 11.30 மணிக்கு குடும்ப வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவது ஆண்களின் உழைப்பா?, பெண்களின் பொறுப்பா? என்ற தலைப்பில் பட்டிமன்ற நடைபெறுகிறது. பட்டிமன்றத்திற்கு விஜய் டி.வி. கலக்கப்போவது யாரு புகழ், பேராசிரியர் கோ. பழனி நடுவராக பொறுப்பேற்கிறார். ஆண்களின் உழைப்பே! என்ற தலைப்பில் குறும்பட இயக்குநர் பாண்டிச்சேரி மதன் அவர்களும், கலைஞர் டி.வி. தணிகைவேலன், பெண்களின் பொறுப்பே! என்ற தலைப்பில் விஜய் டி.வி. திரைப்பட நடிகை அறந்தாங்கி நிஷா, விஜய் டி.வி. பாரதிகண்ணம்மா யோக தர்ஷினியும் வாதாடுகின்றனர். பட்டிமன்றத்தை ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன் தொடங்கிவைக்கிறார்.

அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வீரத்தமிழன் குழுவினரின் போர்ப் பறை நிகழ்ச்சி நடைபெறுகிறது. நிகழ்ச்சியை கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் தொடங்கி வைக்கிறார்.

மாலை 4.00 மணிக்கு முனைவர் த.குமார் வழங்கும் ஸ்ரீ படவேட்டம்மன், ஸ்ரீ மாரியம்மன் குழுவினரின் தெருக்கூத்து நடைபெறுகிறது. நிகழ்ச்சியை செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி தொடங்கிவைக்கிறார்.

மாலை 5.00 மணிக்கு மாலதி மெலோடிஸ் வழங்கும் இசைத் தமிழ் தேனரங்கம் நடைபெறுகிறது. நிகழ்ச்சியில் கலைமாமணி மாலதி, கலைமாமணி சின்னப்பொன்னு, கலைமாமணி அனந்து, பாடகர் முகேஷ், பாடகர் கீர்த்திகா மற்றும் சொற்கோ இரா.கருணாநிதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். நிகழ்ச்சியை திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை தொடங்கிவைக்கிறார்.

மாலை 7.00 மணிக்கு சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அருணைத் தமிழ்ச்சங்கத் தலைவரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் தலைமையுரை நிகழ்த்துகிறார்.

விழாவில் கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு விருதுகள் மற்றும் பொற்கிழி வழங்கியும், கோலப்போட்டியில் வெற்றி பெற்ற மகளிர் களுக்கு பரிசுகளும் வழங்கி, தமிழ்நாடு அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் விழாப் பேருரையாற்றுகிறார்.

நிறைவாக மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன் நன்றியுரையாற்றுகிறார்.

விழா ஏற்பாடுகளை அருணை தமிழ்சங்க செயலாளர் வே.ஆல்பர்ட், பொருளாளர் எம்.இ.ஜமாலுதீன், இணைச் செயலாளர் எ.வ.குமரன் அவர்களும் சிறப்பாக செய்து வருகின்றனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்தநாளை முன்னிட்டு திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மத்திய ஒன்றியம், சிறுமதுரை ஊராட்சியில் அரசுப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி நோட்டு புத்தகங்கள் வழங்கினார்.உடன் பொதுக்குழு உறுப்பினர்கள் பக்தவத்சலு, காடுவெட்டி ஏழுமலை, ஒன்றிய செயலாளர்கள் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், கை.ரா.சடகோபன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், ஒன்றிய நிர்வாகிகள் கிருஷ்ணமூர்த்தி, மாதவன் , மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஞானதேவா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஞானம், கிளைச் செயலாளர் செல்வம், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கிறார்கள்!

## அலங்காநல்லூர் - பாலமேடு ஜல்லிக்கட்டு விழா ஏற்பாடுகள் தீவிரம்!

### அமைச்சர் பி.மூர்த்தி நேரில் ஆய்வு!

மதுரை, ஜன.15 -

உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு வரும் 17ஆம் தேதி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. இதில் கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள், இதே போல் சிறப்புமிக்க பாலமேடு ஜல்லிக்கட்டு நாளை ( 16ஆம் தேதி) நடைபெற உள்ளது. இதில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இவ்விரு ஜல்லிக்கட்டு விளையாட்டு விழாவில் பங்கேற்க வரும் முதல்வர் அவர்களையும் துணை முதல்வர் அவர்களையும் வரலாறு காணாத வகையில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுப்பது, சிறப்பாக விழாவினை நடத்துவது குறித்து மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்தி வருகிறார் அதன் விபரம்

உலகப்புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விளையாட்டு விழா வரும் 17.01.2026 சனிக்கிழமை நடைபெற உள்ளது

இவ்விழா நீதிமன்ற வழிகாட்டுதல்படி வெகு சிறப்பாக நடைபெற உள்ள நிலையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறந்த காளைகள் பங்கேற்க உள்ளது.

இதேபோல் சிறந்த மாடுபிடி வீரர்களும் அணி அணியாக பங்கேற்க உள்ளனர் .

இந்த சிறப்புமிக்க விளையாட்டுப் போட்டியை கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்த்து மகிழ்ந்து சிறந்த மாடுபிடி வீரர்களுக்கும், சிறந்த காளைகளுக்கும் தங்க மோதிரம், தங்க காசுகள் என பல்வேறு விலை உயர்ந்த தரமான பரிசுகளை வழங்கி பாராட்ட உள்ளார்.

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்த காலத்தில் முதன்முதலில் போராட்டக் களத்தில் இறங்கி அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு வாடிவாசல் முன்பாக கூட்டம் போட்டு கண்டன குரல் எழுப்பி எப்படியும் ஜல்லிக்கட்டை மீட்டு எடுப்போம் என சபதம் இட்டு மீட்டு எடுத்த பெருமைக்குரியவர் நமது முதல்வர் ஆவார்.

அதேபோல் மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட எல்லோருடன் ஒத்துழைப்பால் பல்வேறு போராட்டத்திற்கு இடையில் வெற்றி கண்டு முதன் முதலில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் பங்கேற்று மக்கள் ஆதரவுடன் பெரும் மகிழ்ச்சி கொண்டார்.

இதேபோன்று புகழ் மிக்க பாலமேடு ஜல்லிக்கட்டு விளையாட்டு விழாவை கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை (16.01.2026 - வெள்ளிக்கிழமை) துவக்கி வைத்து ஜல்லிக்கட்டு போட்டியை பார்த்து மகிழ்ந்து சிறந்த சீறிப் பாய்ந்த காளைகளுக்கும் காளைகளை அடக்கிய காளையர்களுக்கும் தங்க காசு உள்ளிட்ட பல்வேறு சிறப்பு மிக்க பரிசுகளை வழங்கி பாராட்டி மகிழ்கிறார் .

மேலும் அலங்காநல்லூர் பாலமேடு ஜல்லிக்கட்டை காண வரும் பார்வையாளர்கள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் ஜல்லிக்கட்டை பார்ப்பதற்கான சிறப்பு ஏற்பாடுகளாக குடிநீர், சுகாதாரம், ஆம்புலன்ஸ், பார்வையாளர் மாடம் அமைத்தல், பாதுகாப்பு தடுப்பு வேலிகள் அமைத்தல் உள்ளிட்ட அனைத்து வசதிகளுக்கான ஏற்பாடுகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகத்தினர், விழா குழுவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.





மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு சட்டமன்றத் தொகுதி பழங்காநத்தம் பகுதி தி.மு.க. சார்பாக பகுதி செயலாளர் எஸ்.வி.சுதன் ஏற்பாட்டில் நடைபெற்ற திராவிட பொங்கல் விழாவில் வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி பெண்களுக்கான கோலப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளை துவக்கி வைத்து பரிசுகள் வழங்கி தமிழ் கலாச்சாரத்தின் அடையாளமான ஜல்லிக்கட்டைப் பெருமைப்படுத்தும் விதமாக நடைபெற்ற ஜல்லிக்கட்டு காளைகள் கண்காட்சியையும் துவக்கி வைத்தார். இவ்விழாவில் மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் மதுரை பாலா, பகுதி செயலாளர்கள் பெ.சசிகுமார், மதிவெங்கடேஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி வீரராகவன், வட்டச் செயலாளர்கள் சௌந்தர்ராஜன், முனியாண்டி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.